**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2022**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் <u>ஒரு சொல் / தொடரில்</u> விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10 x 1 = 10)**

1. மருத நிலத்திற்குரிய பூ எது?
2. அணி என்னும் சொல்லின் பொருள் என்ன?
3. சொல்போரில் வெற்றிபெறுவாய் எனக் கூறியவர் யார்?
4. வான ஊர்தியில் வளவனுக்குச் சாப்பிட என்னத் தரப்பட்டது?
5. பராசக்தி பீடம் எங்குள்ளது?
6. காவிரி கடலோடு கலக்குமிடம் யாது?
7. கற்புக்கரசிகள் கொண்ட நாடு எது?
8. சீறாப்புராணம் முதலில் எந்த மொழியில் அமைந்திருந்தது?
9. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?
10. நாலாயிர திவ்ய பிரபந்தம் எச்சமய நூல்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் <u>பத்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>மூன்று வரிகளில்</u> விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. நடுகல் என்றால் என்ன?
2. இறைவன் எப்படி உள்ளான் எனக் கூறுகிறார் உமறுப்புலவர்?
3. நாராயணா என்னும் நாமம் தரக்கூடியவை யாவை?
4. தேவாரத்தை இயற்றியவர்கள் யாவர்?
5. தம்பி அழுத கண்ணீர் ஆறு எவ்வாறு பாய்ந்தோடியது?
6. 'மரணத்துள் வாழ்வோம்' என்ற நூலைப் பற்றி எழுதுக.
7. இலக்கியாளர்களின் படைப்புகளில் காண முடிவது எது?
8. சாலை இளந்திரையனின் சிறப்புகள் யாவை?
9. பாரதியார், பாரதிதாசன் பாடல்களைப் பற்றிக் கூறுக.

10. பாரதியாரின் முப்பெரும் படைப்புகள் யாவை?
11. மழை பெய்வதற்குரிய வேறு அறிகுறிகள் யாவை?
12. காளமேகப் புலவர் வாழ்ந்த ஊர் எது?
13. பெருமை சிறுமை எனச் சிறுபஞ்சமூலம் கூறுவன யாவை?
14. மாத்திரை என்றால் என்ன?
15. மூன்றாம் வேற்றுமை உருபுகள் எவை?

**பகுதி – இ**

**III.** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. பாரதியாரைப் பற்றி விவரித்து எழுதுக.
2. மொழி வாழ்த்துப் பாடலின் பொருள் எழுதுக.
3. 'அஞ்சாமை அஞ்சுதி' எனத் தொடங்கும் நான்மணிக்கடிகை பாடலின் பொருளை எழுதுக.
4. சிறுபஞ்சமூலம் குறிப்பிடும் ஐந்து அழகுகளை விவரிக்க.
5. நாட்டுப்புறப்பாடல்கள் பற்றிக் குறிப்பு வரைக.
6. இயேசு காவியம் நூற்குறிப்பு வரைக.
7. வல்லினம் மிகும் இடங்கள் வல்லினம் மிகா இடங்களுக்கு ஐந்து எடுத்துக்காட்டுகள் தருக.
8. 'பதினெட்டாம் பெருக்கு' குறித்து எழுதுக.

**பகுதி – ஈ**

**I.** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
*Aswer any one of the following questions in fifteen sentences.***(1x10=10)**

1. 'புகழ்' என்னும் அதிகாரத்தில் திருக்குறள் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக.
2. குற்றாலத்தின் இயற்கை அழகை விவரித்து எழுதுக.
3. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் வீரம் குறித்து சான்றுகளுடன் விவரிக்க.

**பகுதி – உ**

**II.** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. ஐவகை தொகைநிலைத் தொடர்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
2. காவிரி ஆறு குறித்து கட்டுரை வரைக.

.....